முருகப்பெருமான் துணை

ஞானவாழ்வை விரும்புகின்ற மக்களுக்கு இந்த அருட்சுவடிகள் பெருந்துணையாக இருக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1318

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.05.2023, செவ்வாய்கிழமை

1. அறமாக வாழுகின்ற வள்ளலே
   ஆற்றல்மிக தர்மத்தின் அண்ணலே
   வரமாக மக்களுக்கு தீட்சை அருளி
   வள்ளல்தன்மைபெற அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 26ம் நாள், 09.05.2023, செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கன்உன் கரம்பட
   வையகத்தில் தீட்சைபெறும் மக்களெல்லாம்
3. மக்களெல்லாம் ஞானவழி வந்து மரணத்தை வெல்லும் சக்திபெற
   ஆக்கமுடன் ஆறுமுகன்என் அருட்தயவு உண்டுஉண்டு
   ஆற்றல்பட அரங்கன் உன்பெயர் சொல்லி அகிலத்தில் ஜெபதபம் புரியும்
   அன்பர்கள் அனைவருக்கும் பிறவாதபேற்றுக்கு ஆற்றல்பட ஆறுமுகன் அருள்துணை வருவேன்
4. வருகவே உன்தர்மத்தை காத்து வையகத்தில் அன்னதான சேவை
   வல்லமைபட செய்யும் அன்பர்களெல்லாம் பெருமைபட என்நாமஜெபம் சொன்னால் போதும்
   பிசகின்றி அவர்க்கெல்லாம் அழியாமை என்கின்ற
   பெரும் சக்திஅருளி காத்தருள்வேன்

5. அருளாக அறமாக அன்பர்களுக்குள்
ஆற்றலாக இறங்கி ஆறுமுகன் யான்
அரங்கன் உன் ஆசிக்கு
அருந்துணைபுரிந்து அற்புதம் நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

ஆற்றலாம் வேலவன் அகிலம் ஆண்டிட
ஏற்றமே உலகில் இன்பம் உண்டாம்

– ஓங்காரக்குடிலாசான்